என்று காரணம் சொல்கிறார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் மற்றும் துறையினுடைய செயலாளர் ஆகியோரோடு பேசுகின்றபோது, 40-ல் இருந்து 45 சதவிகிதம் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது என்ற கருத்தை உள்வாங்கியிருக்கிறார்கள். ஆனால், பாதிக்கப்பட்டுள்ள முந்திரி விவசாயிகளுக்கு நிவாரணமாக நான் ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் தரவேண்டுமென்று கேட்டேன், 10 ஆயிரம் ரூபாய் தர வேண்டுமென்று கேட்டேன். அதைத் தரவில்லையென்று சொன்னாலும்கூட, ஏக்கருக்கு 5 ஆயிரம் ரூபாயாவது வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட வேண்டும். அதேபோல், நேற்றையதினம் இரவு 11 மணி அளவில் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், போதும். உட்காருங்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மந்திரிகளுக்கு இன்றைக்கு நிறைய மானியங்கள் இருக்கின்றன. ஆகவே, முந்திரியைப்பற்றி இன்னொரு நாள் பேசிக்கொள்ளலாம். (சிரிப்பு)

(ஈ) இராமேஸ்வரம் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த மீனவர்கள் கரை திரும்பாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம், தங்கச்சிமடத்தைச் சேர்ந்த மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்று 15 நாட்களாகியும் இதுவரை கரை திரும்பாததால் ஏற்பட்டுள்ள நிலைகுறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் ஆகியோர் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். முதலாவதாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மீனவர்களுடைய இன்றைய நிலை என்னவென்று சொன்னால், "ஒருநாள் போவார், ஒருநாள் வருவார், ஒவ்வொரு நாளும் துயரம்" என்கின்ற அளவுக்கு மீனவர்களுடைய வாழ்க்கை நிலை இருந்துகொண்டிருக்கிறது. கடந்த 12 நாட்களுக்கு முன்பாக, இராமேஸ்வரம் பகுதி, தங்கச்சிமடத்தைச் சேர்ந்த 19 மீனவர்கள்,

2008 மே 14] [திரு. டி. ஜெயக்குமார்]

நண்டு பிடிக்கச் சென்று, இதுவரை கரை திரும்பவில்லை. பொதுவாக நண்டு பிடிக்கச் செல்பவர்கள், திசை தவறிச் செல்வதற்கு வாய்ப்புகள் இல்லை. எனவே, அவர்களை இலங்கைக் கடற்படையினரோ அல்லது மற்ற தீவிரவாத அமைப்புகளோ கடத்தியிருக்கலாம் என்கின்ற ஒரு சந்தேகம் நிலவி வருகின்ற சூழ்நிலையில், இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்ற கேள்விக்கணையோடு -- கடந்த மார்ச் மாதத்தில் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த கிருஷ்டி என்ற மீனவர் சுடப்பட்டார். அதே இராமேஸ்வரம் பகுதியில் இருந்து, மார்ச் மாதத்தில் கிட்டத்தட்ட 8 படகுகளில் கடலுக்குள் சென்ற மீனவர்களை நடுக்கடலிலே ஒரு படகில் இருந்த 8 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தூக்கி எறிந்து...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெயக்குமார், விஷயத்தை மட்டும் சுருக்கமாகச் சொல்லுங்கள். கவனத்தை ஈர்க்கிறேன் என்று இந்த விஷயத்தை மட்டும் சொல்லுங்கள்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்கள். அதற்கும் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன். 8 மீனவர்கள் நிர்வாணமாக்கப்பட்டு, கடலிலே தூக்கி எறியப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதிக்கு நேர் கிழக்கே, இலங்கையைச் சார்ந்தவர்கள், நம்முடைய எல்லையிலே வந்து மீன் பிடிக்கின்றார்கள். எனவே, அரசு நம்முடைய மீனவர்களுக்கு ஒரு கண்ணிலே சுண்ணாம்பும், அதே நேரத்தில் இலங்கை மீனவர்களுக்கு ஒரு கண்ணிலே வெண்ணெய்யும் வைக்கின்ற நிலையில், அன்றைக்கு சிங்களர்கள் மதுரையில் தாக்கப்பட்டு, சுடப்பட்ட போது, அவர்களுக்கு இந்த அரசு பத்து இலட்சம் ரூபாய் கொடுக்கின்ற சூழ்நிலையில், நம்முடைய மீனவர்கள் கடந்த இரண்டு வருடங்களில் எவ்வளவோ பேர் இறந்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கின்றது? மார்ச் மாதத்திலே மட்டும் கிட்டத்தட்ட இரண்டு கடிதங்கள் மத்திய அரசாங்கத்திற்கு முதலமைச்சர் அவர்கள் எழுதியிருக்கின்றார்கள். எழுதி என்ன பிரயோஜனம்?

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெயக்குமார், கேள்வி நேரத்தை நிறுத்தி வைத்துவிட்டு இன்றைக்கு இந்தப் பிரச்சினையை எடுத்திருக்கிறோம். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. டி. ஜெயக்குமார்: முடித்து விடுகிறேன். தொடர்ந்து இதுபோன்ற நிகழ்வுகளைத் தடுப்பதற்கு, நம்முடைய மீனவர்களுக்கு உறுதியான பாதுகாப்பு வழங்குவதற்கு என்ன நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுத்திருக்கிறது என்பதைத்தான் நான் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம், தங்கச்சிமடம் பகுதியைச் சேர்ந்த 19 மீனவர்களை 12 நாட்களாகக் காணவில்லையென்று, அவர்களது குடும்பத்தினர் அங்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும், மீன்வளத் துறை இயக்குநரிடத்திலும் மனு கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் எந்த ஆட்சிக் காலமாக இருந்தாலும், ஆண்டாண்டு காலமாக நாம் கச்சத்தீவை அவர்களுக்குக் குத்தகை விட்டதிலிருந்து, தொடர்ந்து தமிழ்நாட்டினுடைய மீனவர்கள் சிங்கள கடற்படையினரால் கைது செய்யப்படுவதும், சுட்டுக் கொலை செய்யப்படுவதும் போன்ற மனிதநேயமற்ற செயல்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், தமிழகத்தினுடைய முதல்வர், முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்கள் -- இப்போதுகூட சிங்கள மீனவர்கள் தமிழ்நாடு கடலோர காவல் படையால் கைது செய்யப்பட்டு, பத்திரமாக அவர்களெல்லாம் கையசைத்துவிட்டுத் திரும்புகின்ற காட்சி புகைப்படங்களிலே வந்திருக்கிறது. நாம் எந்த மனிதநேயத்தோடு நடந்து கொள்கிறோமோ, அதற்கு நேர் மாறாக தமிழ்நாட்டு மீனவர்களையும், புலம் பெயர்ந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு அகதிகளாக படகுகளிலே வருகின்ற ஈழத்து உறவுகளையும் சுட்டுக் கொல்வதையும், கைது செய்வதையும் வாடிக்கையாகக் கொண்டிருக்கிற சிங்களப் பேரினவாத அரசை— மத்திய அரசை வலியுறுத்தி, மத்திய அரசினுடைய கடற்படையை வலியுறுத்தி, எதிர்வரும் காலங்களில் இதுபோன்ற பாதிப்பு இல்லாதிருப்பதற்கும், கடற்கரை எல்லைகளின் சரியான அளவைக் காட்டுவதற்கும் நம்முடைய அரசு முயற்சி எடுக்குமா? மீனவர்களுடைய துயரத்தைப் போக்குவதற்கு, ஒரு நிரந்தரத் தீர்வை தமிழக அரசும், தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களும், புலம் பெயர்ந்து வாழுகின்ற தமிழர்களுக்கெல்லாம் தலைவனாக விளங்குகின்ற டாக்டர் கலைஞர் அரசு, ஒரு நிரந்தரப் பாதுகாப்பு அரணை ஏற்படுத்தித் தருவதற்கு முன்வருமா என்கிற கேள்வியோடு இந்த கவன ஈர்ப்பை பேரவையின்வாயிலாக ஈர்த்து அமர்கிறேன்.

2008 மே 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, தொடர்ந்து இதுபோன்ற சம்பவங்கள் நம்முடைய தமிழக மீனவர்களுக்கு இலங்கைக் கடற்படையினால் நடந்து வருவதையும், அதற்கு நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் தொடர்ந்து எடுத்து வருகின்ற நடவடிக்கைகள்மூலமாக அவர்கள் உடனுக்குடன் விடுவிக்கப்படுவதும் இந்த அவை அறிந்த ஒன்று.

கடந்த 12 நாட்களுக்கு முன்னால் தங்கச்சிமடம் பகுதியில் மீன் பிடிக்கச் சென்றவர்கள், இங்கே உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, நண்டு பிடிக்கச் சென்றவர்கள், காணாமல் போயிருக்கின்றார்கள். அவர்களைத் தேடுகின்ற பணி நம்முடைய இந்திய கடற்படையினரால் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதனை இந்த அவையின்மூலமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், பழைய இரும்பு வணிகர்கள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்துதல், கட்டுப்பாடு மற்றும் உரிமம் வழங்கல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், பழைய இரும்பு வணிகர்கள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்துதல், கட்டுப்பாடு மற்றும் உரிமம் வழங்கல்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,